சைவ வித்தியாசாலைகளில் உபயோகிக்க வேண்டியவை
சபையார் பால பாடங்களே

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்களை ஆதரியுங்கள்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னேந்தி யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் [illegible] ஆண்டாவது.

புத்தகம் ௫௪] யாழ்ப்பாணம்:— சித்திரபானு ஞு ஆவணிமீ ௨௧௬ (1942 செப்ரம்பர் 14 திங்கட்கிழமை) [இலக்கம் ௨௨] 143

சிவப்பிரகாசர் கவிநயம்

திரு. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை

வெப்பிரகாச கவாமின் செய்குளிய பிரபந்தங்களுள் சோணசைலமாலை யொன்று. இது சொல்வளம் பொருள்வளம் செறிந்தது. கவாமிகள் திருவண்ணாமலையைச் சுற்றி வலம் வருங்கால் பாடியதென்ப. இச்சுவைச் சிறிது ஆராய்வாம்.

அண்ணன் மாபுகழ் மூவரும் புனையரும் பரவன்றி
பெண்கவியு கின்றனக்காம்
பண்ணுலா மிருவரிசைகொ ளின்செவியிற்
பாணி நாவினையு மேற்றுங்கொலோ

(1) மூவர் தேவாரப் பாக்களைச் செவிமடுத்த சிவபெருமான் இவர் கவியையும் ஏற்றருளுவாரா; எப்படியெனின், தும்புரு நாரதர் என்னும் சங்கீத வித்தகர்கள் எப்போதும் இரு செவிகளிலும் பாடிக்கொண்டிருப்பதும் தமது கையிலுள்ள மானின் இசைச்சுவையும் கேட்டுக் கொண்டுளராகலின்.

மூவர் சொலுக் தமிழ் கேட்குந் திருச்செவிக்கே
மூடனேன் புலம்பியசொல் முற்றுமோநாள்
என்னுந் தாயுமானவர் பாடலும் இங்கே ஒப்பிடத்தக்கது.

(2) களியலை நுவர்வாய்க் கோதையர்க் குருகுல்
கன்மலைக் கொடியபுலத் தென்னி
துளியலை பிறவி தவிர்த்தனி யென
நிற்கவிய நிலையெக்க ரெங்காப்

பெண்ணுகையை ஒழிக்கா தெனக்கு நீ முத்தியருளினால் உன்னைக் கேட்பாரொருவருமில்லை யாதலால் நீ அருள் புரியலாம் என்று இரக்கின்றார் ஆசிரியர்.

"அரவக் ஸ்ஸ்வரர்பால் ஆசைநீத் தவர்க்கே விடு தருவம்" என்பது வேதப் பிரமாணம். "மோக மறுத்திலர்நாம் முத்தி கொடுப்பதென ஆகமக்கள் சொன்ன அவர் தம்மை" என்னுந் திருக்கலிற்றுப்படியார் அடியும் இங்கே நோக்கற்பாலது.

(3) "அருங்கவி வாத ஆரனே முதலோர்
அன்பிலே மென்றது வேண்டி
இரங்குதல் பொய்மை யன்பிலே னென
யானியம்பவே மெய்யெனக் கருளாய்"

வெஞ்னாவியாகிய மானிக்கவாசகர் முதலியோர் தம்மைப் பத்தியில்லாதவரென்று இழித்துத் தமது பாடல்களில் கூறிக்கொள்ளுவது உபசாரமே தவிர உள்ளபடி உண்மையன்று; யான் பத்தியில்லாதவனென்பதே உண்மை. ஆதலால் எனக்கு அருள்பாலிக்க வேண்டுமென்று ஆசிரியர் வேண்டுகின்றார்.

(4) "வேலையத்துகின்றும் மலர்தன்யுகில் மெய்யினைப்
பொய்யென மவர்க்கே
ஏலவர் தருவ தன்றி மெய்யினை மெய்யெனு
மெனக்கருள் புரிந்திடாரோ"

உடலுக்கு மெய்யெனப் பெயருண்டு. அதைப் பொய் அதாவது நிலையற்றது என்றறிந்தவர்க்கே திருவருட் பேறு கிடைக்கும். தேசாபிமான முடைய எனக்கு அப்பற்றைக் குறைத்து அருள் புரியவேண்டுமென்று வேண்டியபடி.

(5) "வந்துமா மறலி யெனதுயி ருண்பான் மயிலையுன் சிவனிறிற்கின்றான்
முந்நிரீயெங் பானத்த வாரியின் மூழ்குற விடுத்தருள் புரியாய்"

மீன்குத்திப் பறவை நீருண்முழுகிய மீனை எப்படி அபகரிக்காதோ அப்படி எனை அனுகாதகாத்தில் நீ அமிழ்ந்தி விட்டால் இயமன் என்னை அணுகா என்றபடி.

(6) வினையும் புகலிக் கிறைமணப் பந்தர் விருந்தினுக்
குதவினேன் முந்தற்று
உனியர்க் நிடுவான் வந்தவனன் பதநீ யுதவியென்
துயரெழித் தருள்வாய்"

கொன்னை கொள்ள விடுதலை ஞானசம்பந்தரின் திருமணம் யான் பிறப்பதற்கு முன் நிகழ்ந்ததாயினும் அதை யான் தரிசித்துப் பேறடையும் பாக்கியத்தைப் பெற்றிலேன். இப்போதாவது எனக்கு அருள் புரிய வேண்டும் என்று மன்றாடியபடி.

(7) தேருமருப்பொரி தலையகன்றிடாததேவரைத் தேவரென்றெண்ணி அருமருந்தினை நினையடையாத வறிவிலார் பலப்பிணி யறுமோ

ஆகிய மந்தமுமிலாத அருட்பெருஞ் சோதியாகிய உம்மை அடையாதவர்களுக்குப் பிறவி நீங்காது என்பதாம். வைத்தியநாதராகிய இவர்தான் அப் பிறவி நோயைத் தீர்க்கத் தக்கவர். மற்றைத் தேவர்களெல்லாம் கொச்சைத் தேவர்களே என்றபடி.

(8) விரைவிடை யிவரு நினைப்பிறவரமை வேண்டுநர் வேண்டுக மதுரம்
பெருகுறு தமிழ்ச்சொன் மாலையைக் கணியாக் பிறவியே வேண்டுவன் நமியேன், உன்னைத் தமிழ்ப்பாவால் படும்படியான பிறப்பையே எனக்குத் தரவேண்டுமென்று ஆசிரியர் இரக்கின்றார்.

இதுவாத இன்ப அன்பு வேண்டியபின் வேண்டினார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உம்மை
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுகொன் மிழற்றுபடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்கீழ் இருக்க வென்றார்.

என்னுங் காரைக்காலம்மையார் புராணத் திருவிருத்தம் இங்கே கவனிக்கற் பாற்று.

(9) "அருங்கலம்புனையுமகளிரோரிருவ ரணிமணம்புணர்த்திவாரணமுந் தாங்கமும்புவைத்தருவுன்னொடுமே துதித்திடா துன்றனன்வறிதே"

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இறைவன் மகளிர், குதிரை, யானை முதலிய பரிசுகளை அருள் புரிந்தது அவர் பாடிய தமிழ்ப்பாடல்களின் மீதுள்ள விருப்பத்தாலேயாம். இதைத் தெரிந்து வைத்தும் யான் உம்மைத் துதியாது வறிதே காலத்தைப் போக்கினேன்று ஆசிரியர் வருந்தினார்.

"படியிலா நின்பாட்டி வாரா கனிவிருப்பன் பரமனென்பது [ற்று
அடியனேனறிந்தனன்வானதொழுமீசன் நினைத்துத்தாட்கொண்டுமன
தொடியுள மெனக்கை மடமாதரோடல் நினக்காகத் துதிசெய்தன
மிடியிலா மனைகடாது மிரந்திட்டு முழன்றுமைபால விளங்குமரனே"

என்றும், இவ்வாசிரியரே பிறிதொரிடத்துப் பாடுகின்றார்.

கடிதம்

கந்தளாய்க் குளம்

[1934-ம் ஆண்டு இலங்கையின் சீர்ப்பாசன அறிக்கையை நிலஅளவைத் தலைவர் இன்சினியர் R. L. Brohier வெளியிட்ட குறிப்புக்களுட் சில பின் வருமாறு தரப்படுகின்றது.]

இது கி மு 2590 வருடத்துக் குச் சரியான கலியுகாதி வருடம் 512 ல் குளக்கோட்டன் என்னும் அரசனால் கட்டப்பட்டது. அதன் வரலாறுமைப் பின்னை தருகின றோம்.

இந்நியாயின் ஒருசாரில் உள்ள டெக்கா என்னும் பகுதியை ஆண்ட அரசனுக்கு ஓர் பெண்குழந்தை பிறந்தது. அத்தருணம் அரசியலுக்கு ஆபத்து நேரிடும் என்றும் அதனைத் தடுப்பதற்கு அரசர் ஓரே குழந்தையைப் பலியிட்டால் ஆபத்து நேரிடும் என்றும், அசரீரிவாக்கு உண்டாயது. அதனைக் கேட்ட அரசன் தான் வருந்திப் பெற்ற ஓரே குழந்தையைப் பலியிடச் சம்மதியாது, சக்தமாரத்தாற் செய்த பேழை ஒன்றில் இட்டுக் கடலில் மிதக்குமாறு விட்டான். அந்தப் பேழையும் மெல்ல மெல்ல வந்து திருகோணமலையைச் சேர்ந்த தென் பகுதியிற் கரையேறியது. அந்த இடம் இன்று 'பணிவே' என்று அழைக்கப்படுகின்றது. அந்தணரை ஆண்ட அரசன் பேழையை எடுத்து உடைத்து அதன் உள்ளிருக்கும் பிள்ளையை மனச் சஞ்சலத்துடனே வளர்த்தான். இரசரிக முறைக்கு ஏற்ற குழந்தையாதலின், வளர்மதிபோல வளரலாயிற்று. ஏற்றபருவம் வந்தமையை அறிந்த அரசன் தனது இராச்சிய பாரதத்துக் அரசியாக இருக்குமடி பட்டமும் கட்டி வைத்தான். பெண்ணரசி ஒழுங்காக இராச்சிய பரிபாலனஞ் செய்வளானாள். அந்தச் சமயம் இந்நியாவில் உள்ளவனும் இந்தமிய அஞ்டாரமை உடையவனும் ஆகிய ஒரு அரசன் தான் மனம் கண்டமையை மெய்ப்பிக்க நினைந்தான். இலங்கை மாகாணமில் உள்ள திருக்கோணமலையின் ஒரு சாப்பாகிய சுவாமிமலை முனையில் 'கோணேசர் கோயிலைக் 'கட்டுவிக்கலானான்.

அரசகுமாரன் கோயில் கட்டுவிப்பதை ஒற்றரால் மூலம் அறிந்த இராசகுமாரத்தி சினங் கொண்டவளாகி இளவரசியும் பரிவாரங்களையும் கரைவிட்டு ஓடும்படி ஒரு கரையினத்தைத் தூண்டிவிட்டாள். அரசியின் கசனியத்தை அரசன் கரையினால் எதிர்த்து ஒன்றை ஒன்று விட்டுக்கொடாது நாக்கியன. நிறபொழுதில் பேர் வெகுமுமமாகவி கடைபெற்றது. பின் போர்க் குரிய குணங்கள் யாவும் மாபபட்டு அரசனும் இளவரசியும் ஒருவர் மனத்தில் மறுபவர் குடியிருக்கும் இவ்வாழ்க்கைக் குணம் உடையவாகி இருவருமுன் கூடிக்கொண்டார் கோவிலைகட்டி முடிந்தார்கள். (சைவாலயங்களுக்கு அணித்தாக ஒரு ஆயிரக்கால் மண்டபமும் அமைவது முற்றமையாதலான 'தேவாரசிரியன்' எனனும் மறபெயரும் உடைய மண்டபத்தையும் கட்டுவித்து அதுக் கரணபெயரையே' 'ஆயிரக்கால் மண்டபம்' என்று பெயருங் இட்டார்கள். அந்தக் கோயிலுக்கு உரிய பூசனை நிவேதனங்களுக்காக நடத்தும் செலவினங்களுக்காகத் தமக்கு மத்துளள வெல்லா கருவிகளைக் கோவிலுக்கு மானியமாக கொடுத்தார்கள். தாங்கள் மானியமாக கொடுத்த வயல்களையும் அதனை அடுத்த வனவிளைவுகளையும் சீர்பாதனத் தொழில் புரிவதற்காகவே மேற்கூறிய கந்தளாய்க் குளத்தை வெட்டிக் கட்டுவித்தார்கள்.

குளக்கட்டுவேலை இனிது நடைபெறும் காலத்தில் பழமையும் பெருமையும் வாய்ந்த இந்துமத சமயத்தை

தொடர்ச்சி 3-ம் பக்கம்

மதம்

[திருலோக்கி: சிவஸ்ரீ காசிநாதக்குருக்கள் அவர்கள்]

மதம் என்றால் கொள்கை, அபிப்பிராயம். ஈசனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள சம்பந்தத்தைச் சொல்லுவது மதம். மதநெய்வங்களுடைய நாமரூபத்தாலும், மதாசாரியர்களுடைய அபிப்பிராயபேதத்தாலும், உபாசிக்கும் மார்க்க பேதத்தாலும் மதங்களுக்குப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஈசன் ஒருவனே. ஆனாலிக்கம் என்றும், காணாதிகம் என்றும் மதம் இருவகைத்து. கர்த்தா ஒருவன் உண்டு என்று ஒப்புக்கொள்ளும் மதமெல்லம் ஆஸ்திகமதமே. கர்த்தா ஒருவன் இல்லை என்னும் மதமெல்லாம் நாஸ்திகமதமே. புருஷர்கள் கத்துவ ஞானமெய்தி ஐம்பூட்டி சிறந்தப்பட்ட சமயங்கள் பல பேதப்படுதற்குக் காரணம் அவரவர் பக்குவபேதம் பற்றித் தீவிரமாகவும் மந்தமாகவும் விளங்கும் அறிவின் தாரதம்மியமே. அந்தந்தத் தேசத்தகுந்த தகுந்த ஆசாரம் ஆசாரம் முதலிய வைகளைக் கொண்டு கொள்கைமாறி அவற்றுக்குத் தகுந்தபடி நாமமும் சொரூபமும் ஏற்படுத்தப்படுகின்றன. பொதுவாக எல்லா மதத்திலும் கிஞ்சன செருபி சர்வேசுரன் சர்வகர்த்தா நாமசொரூப மில்லாதவன் முதலியஇலக்ஷணங்கள் சொல்லப்படுகின்றன. உருவ வாசனையில் சொல்லும்போது நாமமும் காமத்துக்குத் தகுந்தபடி சுவரூபமும் அதற்குத் தகுந்த சரித்திரமாதாரணங்களும், அவரவர்கள் புத்தி பரிபாகத்துக்குத் தகுந்தபடி சொல்லப்படுகின்றன. அந்தந்த மதத்தை அநுட்டிக்கும் காலதேசம் இவைகளுடைய பேதத்தால் ஆசாரம் மாறபடுகின்றது. ஆசாராநுட்டான பேதத்தால் மதத்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

பிரயாணஞ் செய்பவர்கள் அவதானிக்கவேண்டிய சில சகுனம்

பிரமஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுருமலை

ஏறுமை, பசு, மனிதர் நும்மினால் ஒருநாளும், பாம்புக்கண்டால் (6) மாதமும், முயல்க் கண்டால் ஒருவாலத்திலும் பிரயாணஞ் செய்யக்கூடாது. அவச்சத்தம் அழுகுரல் சண்டை இவைகளைக் கேட்டாலும் பிரயாணஞ் செய்யக் கூடாது.

சிவப்பு நிறமுடையநாய் பிராமணச்சாதியென்றும் வெண்மைநிறமுடையனும் க்ஷத்திரிய சாதியென்றும், கறுப்பு நிறமுடையநாய் வைசியசாதியென்றும் அழுக்குப்படிந்த நாய் சூத்திரசாதியென்றுமறிந்து சிவப்பு நிறமுடைய பிராமணச்சாதி நாய் வலப்பக்கமிருந்து இடப்பக்கமாகப்போனால் நினைத்துப்போன கருமம் நிலைகாட்டுமென்று கைகூடுமேயாயும், வெண்மை, கறுப்பு, அழுக்குள்ள க்ஷத்திரிய வைசிய சூத்திரச் சாதிநாய்கள் இப்படிப் போனால் நினைத்துப்போகும் கருமம் அதிவிரைவாகக் கைகூடுமென்பதையு மறிக.

பிரயாண சமயத்தில் நாய் புற்களிலாவது மரக்கட்டைகளிலாவது விறகுகளிலாவது மூத்திரம் விடுகிறதைக்கண்டால் பயமும் சித்தாகுவிரோதமும், ஆரோக்கியக்குறைவும் மனச்சஞ்சலமுண்டாகும். நாயினுடைய அழுகுரல் கேட்டால் துன்பமுமுண்டாகும். தனக்கேதிரே மூலிபட்டால் கெடுதியும், தேகத்தை உதறிபோடினால் நன்மையும் எதிரே நின்றால் தீங்கும் உண்டாகும்.

பிரயாணம் செய்பவருடையசுவாசம் அலது மூக்கிலோடினால் குரியகலையென்றும், இடது மூக்கிலோடினால் சந்திரகலையென்றும் அறிதல

தொடர்ச்சி 3-ம் பக்கம்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

கோமும்பு கோட்டாஞ்சேனை வை. முத்துக்குமாரசுவாமி

நிகழும் ஆவணி மீ 1ந் திகதி (17-8-42) நல்லூர் கந்தசுவாமி கோவிலில் தேவாரோகணம் ஆரம்பமாகி, 26 நாட்களாகத் திருவிழா நடைபெற்று, தேர்த் திருவிழா (9-9-22) தீர்த்தம் அதற்கு அடுத்த நாளும், பூங்காவனத்திருவிழாவுடன் சிறப்பாக முடிவுபெறுகின்றது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் ஒருவிழாநாட்களில் அரசாங்கத்தாரால்வழி நெறியே சீட்டுகள் வழங்குவது வழக்கம். யுத்த நெருக்கடி காரணமாக இவ்வசதி இல்லாதுபோகிற்று அளிக்கப்படவில்லை.

நல்லூரைச் சுழ்ந்து திருநெல்வேலி, நவாலியம்பதி, சோப்பாய், வண்ணார்பண்ணை என்னுமவர்களுடைய. இப் பகுதிகளில் வசிக்கும் ஆண்மகன்களும் பெண்மகன்களும் இக் கோவில் கொடியேற்றம் தொடங்கியவுடன், விரதமிருந்து சுவாமி தரிசனஞ்செய்வர்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குச் செல்லும் காலுதிகளைத் தெருக்களினூடு ஆங்காங்கே தண்ணீர்ப்பந்தங்கள் அமைத்து, மோர்நீர், வடிகாய் நீர், சர்க்கரை நீர் வாரப்பட்டு வெகுகாலமாகத்தொட்டு கடைபிடிக்கப்பட்டு வருவது அச்சிடப்பட்டவரச்சட்டமாகும். கோவில் விநிலழிசிய பிரதட்சணை செய்து சேவார் லெல்ர் காலடி எடுத்துச் செல்வார் லெல்ர் அன்னக்காவடி, எடுப்பார் லெல், செடிற் காவடி எடுப்பார் லெல், கறுபாட்டவாளைப்பழம், வெற்றிலை, தேங்காய், ஆகியன கைகளை ஏந்திச் செல்வார் பலர் எனும் கலனாக்கத்துக்கு அரசாங்கமானதும் ஒலமி ஆடம்மவைர்ப் வலனி அமைன சம்மதாய அமுபுதமாக அமைக்கப்பட்ட தேரிலுவலி வரும் கோலம்! அடியார்கள் திருவடித்தைக் கைப்பற்றி இழுத்து, தேவாரு, திருவாசகங்களைப் படிச் செலலும் காட்சி! நிறுப்பிங்கள் தொடக்கம் வரோதிகர் வரையும் முக மலர்ச்சியுடனும் உற்சாகத்துடனும் காணப்படும் காட்சி எனனி! பிள்ளைகள் யாவரும் புதிய புதிய பரவலிப்பினைகள், கற்சமைத்து விளையடுவதற்குச் சட்டியினை முதலிய எங்கும் வாங்குகாலம். பெதுமையர்களு, பேதைமார்களும், மங்கையர்க்கும், அரிவையர்க்கும் விளையல்ல ஜேடிரோடியாக வாங்கும் காலம், மலைகை, முலை, ரோசை, மருங்கொழுமரலினை கூதலில் அணிகலம் அழகான கோபுரதாரி, சிலமு, முதலிய வாகனிலும் இருகை எடுப்பித்த பட்டுச் சிலைகளை சீர பரதிநிப்புவைகளை சீர ஒப்பாரமாக உடுத்தி உலாவரமாக நாவிலுக்குச் செலலுங் காலம்! விடுவில் உள்ள பாட்டனமாருக்கு பட்டமாருக்கும் இது பகுதியான விரதலை; வற்றைகள் வைகாசி, அருகலாள், அருகலைள், புதிய காயகறி மன வாகுகாலம், வாலிபர்களு, ராகசாம சகிதம் கேட்பதறகரிய நல்லகாலம். குருக்களமாருக்கும் வியாபாரிகளுக்கு வருவாயுக்காலம் எவரு நகுகும் மகிழ்சியான காலம்.

* * *

இன்றுள்ள கோவிலுக்கும் சமீபற்றக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன இருந்த கோவிலுக்கும் பாரதூரமான வித்தியாசமுண்டு. கோவிலுக்குப் பக்கத்தே ஒரு தெப்பக்குளமும், மண்டபமும் உண்டு. கோவில் தற்காலமுள்ள

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

சிவ ஞான போத விரிவுரை

[இது குலசேகரன் பட்டினம் "திருவள்ளுவரகம்" திரு. ப. இராமநாதபிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் கலாநிலையத்தில் தொடர்பாக நிகழ்த்திய விரிவுரையின் சாரம்]

1 கற்றுக்க் குறைவிடமாங் கல்வி நிலையத்தாங்
குற்றமகாசெய்மெய்க்கண்டார்ஞன்மைமறுக்-சொற்றதொனாம்
ஆண்டான் டொழுத அறைநிலை விங்கர்மொழி
ஈண்டொழுக முன்னோனுன் போற்று.

2 பொய்கண் டகன்றமெய் கண்டார் புகன்றதனாம்
செய்ய தமிழ் முதனூல் சேர்ப்பிக்கும்-ஐயறவி
வாழ்க பெருமாநுன் வாழ்த்துதெருன் மாமருன்
ஆழ்கலிருள் சேர்கபொருளாக்கு.

பொருள்-முதல்வன், அருள்-முதல்வி(பராசக்தி) தெருள்-ஆவி. (ஆன்மா) மாமருள்-முதலாறன்(ஆதிசக்தி) இருள்-அழுக்கு(மலம்) மாமருளு, என்பதுமறைப்பாற்றலாயமாசுகல், அம்மாசைத்தொழிற்படுத்தி அம்மாசின் வழிநிற்கும் நிருவருள். இதுநிரோதானம் சத்தி எனப்படும். நிரோதானம் மறைப்பு. ஆவி செவ்வி பெற்ற காலத்த இவ்வாற்றல் முதல்வியாக மாறும். மருள், இருள், வினை இவற்றைத் தொழிற்படுத்தலான் இவ்வாற்றலை மருள் (மலம்) எனவுங் கூறுவர். செவ்வி-பரிபக்குவம்.

மெய்கண்டாசனார் செய்தருளிய தனித்தமிழ்முதனூல்தன்னைக் கற்கும் மெய் அன்பர்கள் முதல்வன் திருவடியிற் கூடும். அம்முதல்வனும், முதல்வியும் ஆயியும், இருவருளும் வாழ்கலம் ஒழிக. யான்டும்முதல்வன்விளக்கம்விளங்குக. என்பது இவ்வெண்பாவின்கருத்து.

சிறப்புப்பாயிரம்

"மலர்தலை யுலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு பரிதல்வலைத்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருள்தீர்
தருந்துயர்க் குரம்பையின் ஆமா ரடி
மயர்வற நந்தி முனிநனந் தனிந்த
உயர்நிலை ஞான போத முரைநிதான
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவனனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த நிலைமை யோனே."

இதன் கருத்து, புறத்துக் காணப்பட்டுப் பொருள்களை மறைக்கும் உலகிருளை ஒட்டிக்கண்ணொளியுடன் கலந்து பொருளைக் காட்டுபவன் கதிரோன். கதிரோன் என்றாலும் ஞாயிறாவதொரு ஒன்று. புறவிருள் என்பது பூகிருள்; புறம்-வெளி அகத்திலுண்டாகிய ஆணவமுடன் இயற்கையோ லொட்டி ஆவின் அறிவை மறைக்கும் மலமாகிய அவிருளை இக்கொனுனபோரம் என்னும்மெய்ப்பொருள்நூல் ஒட்டி முதல்வனைக் காட்டி முதல்வன் திருவடி இன்பத்தை அழுந்த வாயிலாகிய பரவையைச் செய்யும். பசை, மரவு, மலமைம் என்பன ஒருபொருட் கிளவி. இவ்வகையுள் அகல ஆவின் உண்மையும் அது அடைய வேண்டிய பேறும் உணர்தல் வேண்டும். அவ்வாறு உணர்வதற்கு இவ்வுடம்பே அளவு கருவியாம். அதனால் "அருந்துயர்க்குரம்பையின் ஆன்மாரடி என்று" கூறுகின்றார் ஆசிரியர்; அளவை, காண்டல் கருதல், உரை என்று மூன்றும். (பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம்) உடம்பின் வாயிலாகவுயிரை அறிதலாவது, இவ்வுடம்பு உயிரன்று, உடம்பில் காணப்படும் பொறி உயிரன்று. (பொறி-உறுப்பு) புலன் உயிரன்று (புலன்-பொறியிடமாக நின்று உணரும் கருவி) கலன் உயிரன்று (கலன்-உட்கருவி அகவொருமை உள்ளம், முனைபபு, சிறப்பு) கலன் எனினும் அந்தக் காரணவினையும் ஒன்று. அந்தக் காரணத்தின், ஒருசைச் சித்தமென்றும், உள்ளத்தை மனமென்றும் முன்பிரை ஆங்காரமென்றும், சிறப்பைப் புத்திபென்றும் வழங்குவர். இவ்வாறே ஆவியுள் சடமாகிய பொன்று ஒட்டிப் பண்பு என்னும் கருவிக்கு (பண்பு-குணத்தும்) மேலதாய் விளைவு, அறிவு, தொழில் இவைகளை விளக்கும் கருவியாய கலன், அறிவு, கொழில் (இராகம், வித்தை, கல்) முதலிய வட்கலன்களும் உயிரன்று, இக்கருவிகளைத் தாண்டிய வாலியமெய் (சுத்தமாயை)யுடன் உயிரன்று என்று கருதுக. விளைவு அறிவு தொழில்களை ஆக்கை ஞானம் விரிவு எனபர். இவ்வாறு ஆராய்ந்தின் உயிர் இவ்வுடம்பைவிட்டு அகலுவது சிட்டப்படுகின்றமை யால் உடம்பு அழியாது நிலைபெறுவதா. இவ்வுடம்பு நிலைபெறும் வாறு. ஏன் எனமுல் உடம்புக்கு அறிவில்லை. ஆவி அறிவுடைய தாயினும் உடம்பொடு கூடாவுழி அவன் அறிவு விளங்குவதில்லை. ஏனெனறால் உடம்பிலைமலும் அறிவு விளங்குமாறுள் உயிருக்கு உடம்புடன் நீச்ச சேவணவுதேவையில்லை. ஆகையால் உடம்பையும் உயிரையும் ஒன்றாச் சீர்ந்து வைத்தவன் பேரறிவுக் வாயகத் முழு முதலாவான். உடம்பு முயிரும் ஒன்றுமாறு உயிர்ச்சி ஒட்டிய மலமாகிய சீவ. தம் முறையில் உயிருக்கு நிலையாக இருப்பு கூறிய ஆவியை முழு முதலவன் நிருவடி சார்சியோம். அம்முதலவன் திருவடிசார மெய்யுணர்வு கைவர வேண்டும், மெய்யுணர்வு கைவரவான செயற்றிறமுடைய நிலைதல் வேண்டும். செயற்றிறமுடைய எனினும் வலத்தச மனிதனாம் ஒன்று. அச் செயற்றிறமுடையினை மறைமாழியே இங்கு "பெருமை பெரிய கடவுள்" என்று கட்டப்பட்டது. மறைமொழி வெளிநூல் மரதிர மெனினும் ஒன்று. அம் மறை மொழியகத்துப் பொருளுண்மை புலப்படுதல் வேண்டும். பொருளு, கடவுளு, உயிர் கட்டு என மூன்று. இவற்றைப் பதி, பசு, பாசம் எனவும் வழங்குவர். பொருள் உண்மை புலப்படும் மறைமொழி "சிவமாய்" இது ஐந்தெழுத்தென வழங்கப்படும். இவ்வைந்தெழுத்தை ஆசான் அருள் வழிபெற்றப் பயின்றவர் அப்பயிற்சி யுறைபயில் மெய்யுணர்வும், மெய்யுணர்வால் நிருவடிப் பேறும் உண்டாகும். அதற்கு வேண்டும் வகையினாலாவது செய்கையர் நூல். இம்மெய்ஞ்ஞானர் நூலுக்கு ஆசிரியர், பெண்ணையாற்றுமருங்குமுப்பட்ட திருவெண்ணெய் வளநிரில் வாழ்கருவிய சிவஞானபோதமுனிவர் (வெண்காட்டடிகள்) என்னும் பின்னாத திருப்பெயரையுடைய மெய்ண்ட நாவனார். இவர் பிறப்பு

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்தகண்புனல் வேந்தனுமோங்குக
ஊழ்த லியதெல் லாமாரணமோதக்
குழக வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானுஷு ஆவணிமீ உக௨ திங்கட்கிழமை

சிவத் துரோகம்!

இற்றைப் பிரசுரத்திற் பிறிதொரிடத்தில் "இவர்களும் பிராமணர்களா" என்னும் மகுடநாமத்துடன் "கோணமாமலையரே" யென்னும் புனை பெயருடன் ஒரு கடிதம் வெளிவந்துள்ளது. அக்கடிதத்தில் குறித்த கடிதர், கொழும்பு திருக்கோணமலை யென்னும் பட்டினங்களிற் சில மாசங்கட்கு முன்னர்ப் பலவைகள் வெடிகுண்டிட்டபோது, அப்பட்டினங்களிலுள்ள சைவக் கோவில்களில் அர்ச்சகர்களாய் அகோவில்களின் நித்திய நைமித்திகங்களை நடத்திக் கொண்டிருந்த பிராமணர் சிலர் தம் மனத்தே யெழுந்த அச்சங் காரணமாக, தாங்கள் செய்து வந்த பூசனை முதலியவற்றை விட்டு விட்டு கோவில்களையும் விட்டு, அந்தப் பட்டினங்களையும் விடுத்த தம் சொந்தஊர்களுக்கு ஓட்டம் பிடித்தனரென்றும், அவர்கள் அப்படி இடையில் விட்டோடியது சரியோ என்றும் ஆக்கங்கை நிரம்பத்துணிவுறா. நமது கடிதர் நிகழத்தும் ஆக்கங்கை நீதியானது. குறித்த கடிதர் மாத்திரமல்லாமல், சென்றவாரம் வெளிவந்த "சத்திய வேத பாதுகாவலன்" என்னும் பத்திரிகையும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்தச் சில பிராமணர் செய்த அடாத செயலிலிட்டுப் பரிகசித்துக் கூறுகின்றது.

"எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு"

என்றாக்கு எவர்கள் நீதியான வையெடுத்துச் சொல்கின்றார்களோ, அவர்களுடைய நோக்கத்தைவிட்டு நாம் சிந்தித்த லின்றி அவர் கூறும் விஷயத்திலுள்ள உண்மையை யுணர்ந்து அதற்குத் தகத் திருந்தி நடந்து கொள்ளல் வேண்டும். குறித்த சிலபிராமணர் செய்த செய்கை அத்தனையும் பெருஞ் சிவத்துரோகமாகும். அப்பிராமணர் எக்காரணத்தை யிட்டாயினும் தாம் செய்த வந்த தூய கருமத்தை யிடையில் விட்டு விட்டு ஓடுதற்கு நியாயமில்லையாகும். அந்தச் சில பிராமணர்களுக்குத் தெய்வத்தில் நம்பிக்கையிருந்தால் அவர்கள் உண்மையான அந்தணர்க்குரிய ஒழுக்கத்தோடு கூடியவர்களாயிருந்தால், தாம் இருக்கோவிலிற் செய்யும் நித்திய நைமித்திகங்களைக் கூலிக்குச் செய்தலின்றிப் பத்திபூர்வமாகச் செய்து வந்தவர்களாயிருந்தால், வேதியர்க்கழகு வேதமு மொழுக்கமு மென்ற ஆப்த வாக்கியத்தைக் கடைப்பிடித்தவர்களாயிருந்தால் அவர்கள் ஒரு போதும் அப்படிச் செய்ய மனந் துணியார்கள். கொழும்பு திருக்கோணமலை யென்னும் பட்டினத்தினே அரசாங்க கடமைகளைப் பார்த்திருந்தவர்களுங் இப்பிரதிநான் அந்த நேரத்தில் தத் தம் கடமையை விட்டு விட்டு ஓடினார்களா? இந்தப் பிராமணர் குறித்த பட்டினங்களில் அரசாங்கசேவை செய்ய நேர்ந்தால் இப்படித்தான் விட்டு விட்டு ஓடுவார்களாக் ஓட முடியுமா? தெய்வத்தில் நம்பிக்கையில்லாத இமமறையவர் தமக்கு அச்சம் நேர்ந்தவிடைக் கண்டிருந்தால் பட்டினத்திலே அபாயமான எல்லையன மறிக்கப்பட்டு இடத்திற்கு அப்பாற் போயிருந்தகொண்டு வேண்டிய நேரத்திலே பட்டினத்திற்கு வந்து பூசை செய்துவிட்டுப் போயிருக்கலாமே; எப்படிப் பார்த்தாலும் இச் சில பிராமணர் செய்த செயல் சிவத்துரோகத்தின் பாற்படு மென்பது நிசம். ஆனாற் கொழும்பிலும் திருக்கோணமலையிலும் உள்ள சில சைவாலயங்களிற் பூசை செய்து வந்த சில பிராமணர்மாத்திரம்மேலைசொல்லப்பட்ட ஆபத்துக் காலத்திலும் தாம் அஞ்சுவதின்றிக் கோவிலின் பக்கத்திலேயே குடியிருக்கொண்டு நிரமமாகப் பூசை செய்து வந்தார்களென ஆதாரத்துடன் அறியலானோம். அப்படியான நிடபத்தியுள்ள அந்தணரை யாம் பாராட்டுகின்றோம்.

இனி, பாதுகாவலன் பத்திரிகைக் கடிதர்க்கு நாம் சொல்லத்தக்க தொன்றுளது; சைவசமயத்தின் குருக்கள்மாராயுள்ளார் எங்கள் சமய குரவருமல்ல, குரவுருமே யல்லர்மல், இப்பிராமணர்களும் தேசிகர்களுமல்லர். பிராமணர்கள் வேதாகமக் கிரியைகளையும் அக்கினி காரியத்தையும் செய்தற்காகிய புரோகிதராகவும், தேசிகரெனப்படும் சைவர்குருக்கணமார் பிராமணரல்லராய்க்குத் தீக்கை அபரக் கிரியை முதலியவற்றைச் செய்தற்குரியோராகவும் கொள்ளப்படுவர். சில பிராமணர் சில தேசிகர் தம் ஒழுக்கக் நிறம்பேதையிட்டு ஏனையபிராமணர்களையும் தேசிகர்களையும் அச்சிலருடன் வைத்தெண்ணி அவமதிப்பதும், அப்படியே ஏனைய சமயத்தையும் அதற்குரிய குருக்கணமாரையும் குறை கூறுவதும் எவர்க்காயினும் முறையாகா தென்பதாம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இந்துக்கல்லூரி கல்லூரிக் கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தின் பொருட்டு விடுத்த விளம்பரமிது இன்று ஆம்பமாயிற்று.

தானவரவு

கல்லூர் பிரமஸ்ரீ வே. கார்த்திகேயக்குருக்களின் சமயகாரத்தில் அவருடைய புதல்வரால் யாழ்ப்பாணம் சைவபரிபாலசபைக்குத் தானமாக வரித்தலுப்பே ரூபா 1 வரப்பெற்றோம்.

சி. பசுபதிச்செட்டியார்
ஷை சபைத்தலைவரி

ஊர்நெல்லு விற்பனவு

இலங்கையிலே யியலும் ஊர் நெல்லையும், ஊர் அரிசியையும் அரசினர்மாத்திரமே விலைகொடுத்து வாங்கவேண்டுமென்ற நிட்டத்தைக் கமத்தொழில் மந்திரிசபை அங்கீகரித்திருக்கின்றது. அதனால், நெல் வேளாண்மை செய்வோர் தங்கள் தேவைக்குக்கண்டு மேலதிகமாயிருக்கும்நெல்லை அரசினருக்கு விற்பதே கடமையாகின்றது. அவர்கள் விதைநெல்லுக்கு வேண்டியதைச் சேமித்து வைப்பதற்கும் தங்கள் குடும்பத்திலுள்ளவர்களில் தலைக்கு 25 புசல் வீதம் ஒருபோக முதல் மறுபோகவரையில் வைத்துக்கொள்வதற்கும் அதுமதிக்கப்படுவார்கள். அரசினர் வாங்கும் நெல்லுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் விலை புசல் ஒன்றுக்கு 3 ரூபா 25 சதம்.

விளம்பரம்

[illegible]

பொலிஸ் அதிகாரிகட்கு மாருகத் தொடர்ந்த வியாச்சியம்

நாவிதனுடைய முறைப்பாடு

வடமராணப் பொலிஸ் தலைவராயெ மிஸ்டர். S. G. உ. செபாலிகா என்பவருக்கும் பொலிஸ் பரிசோதகருளொருவராகிய தெலவாக என்பவருக்கும் மாருக, இலவயிக் கதிரவேலு என்னும் காவிதன் நாயன் மார்கட்டு வைத்தியசாலையில், வாப்பா பாணம் மேற் நீதிதல நீதிபதியாகிய மிஸ்டர், குவெனரின் பர்னாந்து செனவிராசா செய்தபோது, பின வருமாறு முறைப்பாடு செய்துள்ளான்:—

"சென்ற ஆகஸ்ட் மாசம் 20உ இரவு 9 மணிவளவில் நான் பெரிய கடையிலிருந்து சாப்பல்தெரு வீதி மார்க்கமாக வீட்டை நோக்கிப் போகும் மார்க்கத்தில், குறித்த பொலிஸ் பரிசோதகரின் வீட்டிலு கணித்தாகவுள்ள சந்நியிற் போகும்போது, அவருடைய வேலைக்காரச் சிறுவன் இடையில் வந்து என்னைத் தடுத்து என்னைப் பார்த்து உனக்கு ஒரு சகாயஞ் செய்வேன். கொஞ்சக் காசுதா என்று கேட்டான்; நான் பணங் கொடுக்க மறுத்தேன்; இதற்கிடையில் மேற்படி பொலிஸ் பரிசோதகர் வந்து என்னைப் பிடித்தார்; உடனே அவர் தம்வீட்டிற்கு என்னை இழுத்துக் கொண்டுபோய், வீட்டுப் பின்புறக் கதவு திறக்கும்படி தமது நீலக்காரனிடஞ் சொல்ல, அவனவர் அப்படியே திறந்தவிட, அவர் என்னைக் கொண்டுபோய் நான் அணிந்திருந்த சாண்வையினாலேயே என கழுத்தை ஒரு மரணோடு சேர்த்துக் கட்டினார். அன்பின அவர் ஒரு கயிற்றை யெடுத்துக் கொண்டு வந்து அதனாலேயே என்னுடைய பைச் சேர்த்துக் கட்டிவிட்டு என முகத்திலும் வயிற்றிலும் அறைந்தார். பிறகு பொலிஸ் தலைவராகிய மிஸ்டர். செபாலி அங்கே வருவதா நீ எவ்ஏருக்கு வருகிறாய் என்று என்னைக் கேட்டுவிட்டுப் பொலிஸ் பரிசோதகருக்கு ஏதோ இரகசியமாகச் சொல்லிவிட்டு மீண்டு போய்விட்டார். சற்றுச் செல்லப் பொலிஸ் தலைவர் ஒரு பொலிசுடன் காறிலேறிக் கொண்டு மீண்டு அங்கே வந்து காறைத் தெருவோரத்தில் நிறுத்திவிட்டுப் பின்புறக் கதவாற் புகுந்தார். குறித்த பரிசோதகர் என்னட்டுக்கிளை அகிழ்த்து விட்டு அங்கு வந்து கிடந்த பொலிஸிடம் என்னை ஒப்புவித்தார்; உடனே பொலிஸ் தலைவர் என்னையும் தம காரில் ஏறக்கொண்டு காறைச் செலுத்தும்போது "உன்னைக்கொல்லப் போகிறேன, உன வீட்டைக் காட்டு என்று என்னைக் கேட்டார்; எனக்கு கோட்டைக்குட் கொண்டு போய் அங்குள்ள காவற் கொட்டிலில் காவலேறி இருத்தினார்; காவற்காரன் கையிலே பொலனு வைத்திருந்தான்; அரைமணி நேரஞ் செல்ல, பொலிஸ் பரிசோதகர் ஒரு பொலிசுடன் காறில் வந்து அங்கே இறங்கினார்; இருவரும் அந்த ராத்தில் என்னைப் பிடித்து ஏறறிக் கரணடு கொழும்புத்துறை மார்க்கமாகக் கொண்டு போனார்கள். இரத்தத்தண்ணு இறங்கி இருவரும் என குறுமியைச் சுறறிப் பிடித்தபடி கடறகரைக்குத் தளளிக் கொண்டு போனார்கள்; உடனே அந்தப் பொலிஸ் பரிசோதகர் என் மரியை கத்திரிக்கோலினால் அரிந்து விடடு எனனை நிலத்திலே கிடத்தச் செய்தார்; நான் கிடக்கவே இருவரும் என்னை உதைத்துக் காலால் வயிறறிலுக்கு மாறாமல் தடுக்க காண ஒருவரு சத்த, சத்தமிடடபோ உண்ணக் கொன்று விடுவேனென்று கறிக்க கத்தியை எடுத்துக் காட்டி மிரட்டினார்கள். அந்த நிரத்தில் என அறிவு மயங்கவிட்டது; அந்தறற அறிவு வந்தபோது நான் கடலுக்குள் தொடையளவு ஆழ்ந்த நிலையில் இருக்கக் கண்டேன்; மெல்ல எழுந்து கரையை சேர்ந்தேன்; அப்படிப் போகும்போது குறித்த பரிசோதகரும் பொலிஸும் மீண்டும் என்னைப் பிடித்து அடித்தார்கள் அறிவு மயங்கினேன்; பிறகு அறிவு வந்தபோது செமட்டலர் முனபாகப் எனனைத் தலைக் கொட்டிலுக்குக் தூக்கிக் கொண்டு போக்க கண்டேன்; அவர்களுடா ஒருவர் பெயு என்னை என விட்டுக் கொணடு வந்தார்கள். அந்நிரத்தில் எனனுடைமையில் ஏவட்டி துணி யின்றி நிவாணியாயிருந்தேன்."

குறித்த கறுப்பேறுவான மிலைக்கமகம் என்பவனை தவ கவனலுக்கு கேர்த்த ஆபத்து விஷயமாக, வடமராணத் தலைவருக்கும் நீதிபதிக்கும் மறுப்பண்ணியமை யினால், இந்த வாப்ப பிறப்பு விசாரணையின்போது மாசணத தலைவரும் யெனபார்கட்டு வைதிய சாலைக் தலைவரிடட்டர். V. S. இரமராஜனவர்களும் சமுகமாகவிருந்தனர்.

இந்த விஷயமாக உண்ணுட்டு மந்திரியின் கட்டளை

வடமாகணப் பொலிஸ் தலைவரும் அங்குள்ள பொலிஸ் பரிசோதகரொருவரும் தன்னை மோசமாக அடித்துக் காயப்படுத்தினார்களெனக் கதிரவேலு என்னும் காவிதன அவ்விருவருக்கும் மாருக வழக்குத் தொடர்ந்திருப்பதனால் குறித்த விஷயத்தையிட்டு விசாரித்தற்பொருட்டுக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு பொலிஸ் அதிகார உத்தியோகத்தரை உடனே அனுப்பி வைத்தல் வேண்டுமென உண்ணுட்டுப் பிரதி மந்திரியாகிய திரு. ஏ. மாரிதேவ அவர்கள் கட்டளை செய்துள்ளார்.

இலங்கைக்கு அரிசி கொடுக்கப்படாதாம்

இலங்கை உண்ணுட்டு மந்திரியாகிய ஜேர், பான் ஜயநிலகை இலங்கைக்கு அரிசியேற்றுவதற்கு அனுமதி பெறுவதென்ற நோக்கத்துடன் இந்தியாவில் வந்து லண்டனிலுள்ள மந்திரிமார் சிலரைச் சந்தித்துப் பேசியுள்ளாரெனத் தாம் அறிந்தாலும் இந்தியாவிலுள்ள அரிசியெல் இந்திய மக்களின் உணவுக்கு மாத்திரம் போதுமே யொழிப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் போதியன வல்ல வென்றும், ஆகலால் இந்தியா அரிசியெல்லை இலங்கைக்கு அனுப்பவொண்ணாதெனறும் கல்கதாவிலுள்ள மாவாரி வியாபார சங்கத்தார் மேலதிகாரிகட்கும் பங்களை அரசினருக்கும் தெரிவித்திருக்கிறார்களாம்.

ஹிந்துக்களுக்கும் முஸ்லிமகளுக்கும் எச்சரிக்கை

தற்பாதையை மனோபாவம் உள்ளாட்டுக் கலகத்தையே விளைவிக்கும்

இக்கூர் செப் 11— வகுப்புப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்தில் வெறிய மாசபையும் முஸ்லிமினரும் சற்றபொழுது தாங்ள அனுஷ்ட்ட வரும் மனோபாவத்தும் பிரயோகமாக விருந்தால அது உள்ளாட்டுக் கலகத்தையே உண்டபண்ணு மென்று இகூரர் மகாராஜ் எச்சரித்திருக்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது:- நமது பிரச்னையைப் போன்றதான ஸ்ரேயர் முஸ்லிம்களிருக்கை. அவரு வெய்வேறு வகுப்பினருக்கும் ஆரண மாகண கையாட்டி அளிக்கப்பட்டதன் மூலம் அப்பிரச்னைக் தீர்க்கப்பட்டன. சரித்திரத்தில் இதுபோன்ற பல உதாரணங்கள் காணப்படுகின்றன. ஆனால், இப்பொழுது இந்தியாவில் மார்க்கம் சம்பந்தமான ஒருவகுப்பு அல்லது வர்க்கம் தனக்குப் பூரண கதந்திரம் வேண்டு மென்று கோருகிறது. பிதாவுக்களில் இதுமாதிரி எந்த வர்க்கமுமே கோரியதில்லை.

தேசாதிபதியின் உத்தியோகரல நீடிப்பு

மாட்டிமை நிக்க மன்னர்பிரான் ஜேர், அன்று கண்டிக்கொற் இலங்கை தேசாதிபதியாகப் பதவி வகிக்கும் காலதை நீடித்திருக்கிறார் ஜேர். அன்று கலடிக்கொற 1937-உ ஆண்டு இலங்கைத் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டார். சாதாரண காலமாக விருப்பின் அவருடைய உத்தியோக காலம் இவ்வருடா காலத்தில் முடிவடையும்.

திருத் தணிகைத் திருவிருத்தம்

திருவருள் கொழிக்குமுன் சரவணப் பொய்கைத்
திருத்தற் நிகழ்தடியே
நீராத பழவினை யாழக்கைக் கழிதுவருக்
திருவாள வைத்தரிசியா
வுரிமையுட னடியேனு மச்சர வணப்பொய்கை
யுற்றுவந் நாடியுட்கொண்
டுன்னடிக ளேசரண மென்றொல மிறமெனக்
குறுகுறுற தவிர்த்தருளுவாய்
மருவளரு மலரோன் றருக்கினைக் கண்டகர
மலர்கொண்டு தாக்கியவனை
வன்சிறை யிருத்தியுல கேழும் படைத்தனின்
வல்லான்மை சொல்லவசமோ
தருவளரு மமரா வதிக்காவை வாழ்வித்த
சரவணேற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரள்விருந் புமதேச
சகலபின் டிதாரனே.

இதன் பொருள்: திருவருளாகிய நிதி மோதுகின்ற தேவர்களுடைய தலத்தில் விளங்கும் சரவணத்தடாகத்துள்ள தீர்த்தத்திற் படிந்து மூழ்கி, இலகுகில் விட்டகலாத பழைய வினையாகிய கன்மமலமெனப்படும் மலத்தையைக் கழுவிவிட்டுத் தேவரீரைத் தரிசிக்கும்படி வருகின்ற திருவருட் செல்வரைத் தம்வயிலும் தரிசனஞ் செய்து, தேவரீருடைய அடியவனென்ற உரிமையோடு அந்தச் சரவணத் தடாகத்தில் இறங்கி மனப்பூர்வமான பத்தியோடு மூழ்கி, திருக்கோயிலுள்ளே புகுந்து தேவரீருடைய திருவடிகளே நமியேனுக்குப் புகலிடமென்று ஓலமிடலானேன்; இங்ஙனம் ஓலமிடும் அடியேனுக்கு நேர்த்த குறைவை நீக்கியருளல் வேண்டும்; வாசனையோடு கூடிய சொற்தாமரைப்பூவின் கண்ணே யிருப்பவராகிய பிரமதேவனுடைய அகந்தையை நோக்கி, தாமரைப்பூவை கிழர்த்த திருக்கரத்தால் அப்பிரமனின் தலையிற் குட்டிக் கொடிய சிறைக்கூடத்திலிடு, ஏழு உலகங்களையும் அகப் பிரமனுக்குப் பிரதிமூர்த்தியாக விருந்து படைத்தருளிய தேவரீரது பராக்கிரமம் எம் போலியாரால் எடுத்துச் சொல்லுந் தரத்தோ! கற்பகம் முதலான பஞ்சதருக்களும் ஒவ்வி வளரப்பெற்ற அமரரையே பெண்ணும் பட்டினத்திற்கு இறைவனாகிய இந்திரனை வாழவைத்த சரவணபவரே! குமாரக்கடவுளே! திருத்தணிகாசலம் என்னும் இத்தலத்திற் சாக்கிதியமாகக் கோயில் கொண்டருளியவரே! பரமேசுவரன் திருவுளம் விரும்பிக் கேட்ப அப்பெருமான் திருச்செவியிற் பிரணவப் பொருளை உபதேசித்தருளியவரே! சகல கலைகளினும் வல்ல புலவர்கட்குத் தலைவராக விளங்கும் பெருநாளே, என்றவாறு.

திருக்கம்-தீர்த்தர்; உட்கொண்டென்பதற்கு அத்தீர்த்தத்தை ஆசமனஞ் செய்து எனப் பொருள் கொள்ளினுமாம். சண்முகமூர்த்தி மம வழிபடுதலின்றி அகக்தையுடன் சென்ற பிரமதேவத் தமது முன்னிலையில் விளித்து "நான் முகனே, உன்றெழில் யாதென' வினவி, "என் றெழில் நெட்டிக் தொழில்" எனப் பிரமதேவர் விடைகூற, குமரவேள் 'உனக்கு வேதம் போதுமோ" எனக்கேட்ப "ஆம்" எனப் பிரமா சொல்ல, "அங்ஙன மாயிற் கூறுதி" என முருகவேள் கட்டளையிட, வேதத்தின் சிரசாக விளங்கும் பிரணவத்தைப் பிரமதேவர் உச்சரிக்க, அறுமுகப் பரம்பொருள் "பிரமனே, அவ்வனவில் நிற்றி, இப் பிரணவத்தின் பொருளை அறைநர" எனக் கட்டளையிட, அவன் அதன் பொருளறியாது மயங்கி நிற்ப, கந்தக்கடவுள் அந்தப் பிரமனின் கரன்களிலுள்ள குறுங்கும்பல் குட்டித் தமது திருவடியால் உதைத்து அவனைச் சிறையிடக் கட்டளையிட்டருளின ரென்பது வரலாறு. இதனை:-

"எட்டொறுதலக் குடிலியிற் பயன் இனித்தென்றே
கட்டி வாத்தல்லன் மயங்கலும் இதன்பொருள் கருநாம்
கிட்டி செய்வதற் றன்மையை தேவெனுச் செவ்வேள்
குட்டி னன்அயன் னன்குமா முடிகளுக் குறுகவே"

எனவும்,

"மறைபு ரிந்திடுஞ் சிவனருள் மதலைமா மலர்மேல்
உறைபு ரிந்தவன் வீழ்தரப் பதத்தினால் உதைத்து
நிறைபு ரிந்திடு பரிசன வரக்கொடு கிளைச்
சிறைபுரிந் திடுவித்தனன் சந்தமாஞ் செம்மேல்"

எனவும் கந்தபுராணம் ஆயனைச் சிறைபுரிபடலத்துவந் திருவிருத்தங்களாலுணர்க. இத்திருவிருத்தம் இத்தலத்திலுள்ள தீர்த்தத்தின் மகிமையை யுரைத்தவாறும். (உ)

'நஞ்சும் அமுதாம்'

[வித்துவான், திரு. K. M. வெங்கடராமையா M. A., B. O. L.]

நீற்றறையில் வறின்றித் திருவாவுக்கரசர் இருந்ததைக் கண்டசமணர் 'இது அதிசயமன்று; அமண் சமயத்திற் கற்ற மந்திரசாதத்தாற் பிழைத்திருக்க முடிந்தது' என்று வேந்தனிடைகூறி, கம்பளியைப் பெருத்தங்களாரை வல்லிடம் வளட்டிக் கொல்ல வேண்டுமென்று அரசனிடம் கூறினர். அரசன் அவ்வாறே உத்தரவிட, விடங்கலந்த பாற்சோற்றை அவருக்கு வளட்டினார்கள். 'நஞ்சும் அமுதாம் எங்கள் நாதர் அவரைக்கொன்று, வெஞ்சமணர் இடுவித்த பாலுடனே மிசைக்கிருந்தார்.' எவ்வாறு நஞ்சுமமுதாயிற்று என்பதனுக்கு ஆகாரம் தருமாறு சேக்கிழார் பெருமான்,

பொடியார்க்கும் திருவெளிப்
புனிதர்க்குப் புவலங்கள்
முடிவாக்கும துவர் நீங்க
முன்னையிடம் அமுதாகுன்
படியார்க்கும் அறவிய
பைபடியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம்
ஆவதுதான் அரிதுமோ
என்ற இச்செய்யுளை அருளியமை காண்க.

நஞ்சு அப்பெருமானை வழிபடுதல் நிறம்நல என்ற விஷயத்துக்கு அரசரான திருநாவுக்கரசர் நிரூபிக்கையிற் மிழக்கண்ட பாசறத்தக் காணலாம்:-

நஞ்சு நன் கால மாலை
நாடரச்சிவை மறந்திரவே
அஞ்சுவதுந் தோதின் றாளுக்
அரவுக்கு கடவதுகாம
வஞ்சனைப் பாறசோ முகில்
வழங்கலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார்
கவிபாடவி யடிகளாரே.

இத் திருநெறிசையால் அமணர் பாறசோற்றில் நஞ்சு கலந்து வளட்டினர் என்றும், நாதர் அச்சுவிலே அமுதாக்குவித்தார் என்றும் அறிகிறோம். 'வழங்கிலா அமணர்' என்றது கோக்கின் தன்மாட்டு பரிதொரு பிழையும் இல்லாதிருக்கையினை அமணர் அறிவியாக கூடாது கொண்டார் என்று வரிசத்திருவடியே திருவுள்ளத்துக் கொண்டார் எனின் அமையும். இப்பாசுரத்து முதலிண்டிடுவர்கள் பெருமானது திருமந்திரமாகிய திருவஞ்செழுத்தை யோதிப் பரிசோறை உண்டிருப்பர் என்றும், அவ் வஞ்செழுத்தெனும் அருமறை மகிமையை இவருக்குக் தணியாகிய என்றாலுமாம் அறியலாம்.

அமணர் நஞ்சூட்டிய விஷயம் திருஞானசம்பந்தர் திருகோசையாம் வரையிலும் அப்பர் பெருமான் குறிக்காதது ஏன்? பதிகம் ஒழுதுமுக பகுமா கவிபாரி' என்ற கமியமாடர் கம்பகள் 'திருச்வகாசமலை'யில் குறித்தமையான் திருநாவுக்கரசர் 4900 பதிகங்களை அருளிச் செய்தன ரென்பது போதரும். திருமுறை கண்ட புராணத்து, 'எண்புறற கவாசர் முனனுறறேழ்' என்றமை யின் இவர் படியலற்றன 307 பதிகங்களே! திருமுறையிலே தொகுப்பப் பெற்றன என்பது போதரும். மறைபுப் பதிகங்களை நாம் ஓதுமபோது பெறறேமிலை. அவர்தமறறைதனவற்றை அச்சான்றுமலையிருக நிருக்கலாம்! அவரே திருஞானசம்பந்தர் கோயிலை கொண்

கடிதம்

இவர்களும் பிராமணர்களா?

இந்துசாதனப் பத்திரிகையிடம் அவர்க்கு

ஐயா,

எமையனதில் கோக்கலெ சந்தேகங்களைத் தங்கள் மூலமாகக் கேட்டறிந்து தங்கள் பத்திரிகை வாயிலாப் பலறிய நீக்கிக் கொள்ள விருப்புறேன். லொமாசங்கட்கு முன்னர் இந்த இலங்கையின் பிரதான பட்டினங்களாகிய கொழும்பும் திருக்கோணமலையிலும் யப்பானிய ஆரய் விமானங்கள் பறந்து வந்து வெடிகுண்டுகளை போட்டவுடன், அப்பட்டினங்களில் வசித்த சைவக்குருமார் பிராமணர்கள் பூசைகளை விட்டோடி ஓடுவிட்டோடி யோடியமை நீங்களும் அறிகிறவிஷயமும் அறியும். ஆனால் மற்றைச் சமயங்களுக்குரிய குருக்கண்மார் மாத்திரம் அக்குண்டு விழச்சிக்கு அஞ்சியோடாது தங்கள் தேவாலயங்களுக்குரிய கருமங்களையும் சமய பேதங்களையும் அந்த ஆபத்தான நேரத்திலே இயன்ற வளவிற் நிரமமாகச் செய்துகொண்டு அங்கே தானே இருந்து, சைவமல்லாத பூசைகளை யிப் பிராமணர்கள் மாத்திரம், தாங்கள் பூசை செய்துகொண்டு வந்த நாளிலெல்லாம், அவை எப்படி போனாலும் மக்களை காரும் மனங் மக்களும் மாத்திரம் உயிர் தாங்கினாற் போதுமென் றெண்ணித் தம்முயிரையுங் கையிலே பிடித்தவர்களாகி ஓட்டமாக ஓடித்தப்பிய நாக மெனனர் இப்படி அப்பிராமணர் செய்த செய்கை சரிதானா? இது சிவத்துரோகமாகாதா? திருக்கோணமலையிலே நிகணேசருக்கு வாராதில் ஒரு ஊனங்கும் பிராமணனை ஒரு ஊனங்கும் படைப்பாழம் பூசை செய்வது வழக்கமாகும். இவர்களுடா பிராமண குறித்த சதாப் பதிதில், பிச்சை வேடைம் வாயைப்பிடி என்றவாறு சொல்லிக்கொண்டு ஓடிவிட, அந்தப் பட்டணம் அப்படி வருகி யிருந்தபிந்தி அவர் தொட்கும் இவரவர் இருந்தவிடத்தில் வாழ்வு சமமாகச் செய்து வருகிறார்; இந்தப் பட்டணத்தக்குள்ள மனத்திடமும் பயந் வைராக்கியமும் பூசையை விட்டுவிட்டு ஓடமல் பிடித்த பிராமண சேவுகர்களிலும் இல்லாமற் போய் விட்டதா! இவர்கள் இன்னமும்பிராமணர்களாகத்தம் பழமையை சேர்ந்து பூசையைப் பண்ணுகிறவர் முறையாகுமா?

இங்ஙனம்,
கோணமாமலையரி.

நெற்காணி விற்பனைக்

43 பரப்பு அரியாலையில் காரிப்பள்ளியின் கட்டுக்கருகிலும் 40 பரப்பு கோப்பாயிலும் இருக்கிறது. வேண்டியவர்கள் வி. தாமோதரம்பிள்ளை சவகச்சேரிக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

8—8—42

Mis 99—13.8—12.9.42

நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

வைக் கேற்றவாறு மின்சார விளக்குளுடன் விளங்குகிறது. இப்போதுள்ள கந்தசுவாமிகோவில், 1793ம் ஆண்டில் நல்லூர்க் கிருஷ்ண ஐயர் என்பவரால் ஒல்லாந்த அரசாட்சியாரின் அனுமதியுடன் தாபிக்கப்பட்டது. சோவிந் கட்டடம் இப்போதுள்ள இடத்தில் ஓர் ஓலைக் கொட்டகையில் கிருஷ்ண ஐயரை அமைத்து வெள்ளி வேலாயுதத்தை வைத்துப் பூசித்து வந்தார். கிருஷ்ண ஐயர் மகன் கப்பலப்பகுக்கு 1805ம் ஆண்டு சோர்த் தேசாதிபதியவர்களால் தண்டிக்க வரிசையுடன் கியமம் பட்டோலை ஒன்று பெறுக்கப்பட்டது.

இக்கோவில் இத்தகைமை முயற்றியால் சிறிது சிறிதாகத் திருத்தப் பெற்றது. இதற்குப்பலியை முக்கியமாக ஏற்று கடத்தியவர் இருகூரத மாப்பாணர் என்பவரே. அக்காலத்தில் அவர் கச்சேரிச் கிருப்பாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார் அக்காலம் பிரட்டியார் இவ்விடயம் ஆர்ம்ப சாட்சிக்காலம். சமயச் வாதினம் வழங்கப்பெற்றிருந்த காலம். முதலிரைச் சாக்கை என்னும் தற்காலத்தில் வழங்கப்படும் இடத்திலதான் கைக் கோளர் செய்யும் தெதிச் வேலைகளுக்கு முத்திரையிடப்பட்டன. இப்படி முத்திரை யடிக்காவிட்டால் வேலைள் விற்கப்படாது. முத்திரை யடிப்பதற்கு வருவாய்க்குப் பொறுப்பு இருகூரத மாப்பாண முதலியார். முதலியார் தமது கடமையுடன் கந்தசுவாமி கோவிலுக்காக ஒவ்வொரு வேலைக்கு ஒவ்வொரு அணாச் சேர்த்தார். வேறு பொதுப் பணங் சேர்த்தும் இருகூரத மாப்பாணர் கந்தசுவாமிகோவிலைக் கட்டுவித்தார். கோவற்களுக்கியத் நிறப்பு கோயிற் குருக்களிடமும் இவரிடமும் இரு நிறவு சோவைகள் இருந்தன.

1870 ம் ஆண்டு தைமாசம் நல்லூர் கந்தசுவாமி கோயிலைக் கவனிக்கும் ஆதமுகராவலர் ஒரு பிரசங்ஞ் செய்து ரூபா 6000 வரையில் கை யிருப்பாகும் சேர்த்தனர். ரூபா 3000 வரையிற் செலவு செய்து கருங்கற்களும் எடுக்கப்பட்டன. காலத்தில் தேர்த் திருவிழாவுக்கு முதலாவ கோவிலுக்கு முன்னாடி ஒரு பெரிய சப்பரம் வந்தது. அதை ஆதமுகராவலர் ஏற்றத் முயற்சித்தார். இக்கோவில் அதிகாரியாக இருந்த கலைமாப் மாப்பாணர் முதலிய காவலரின் விருப்பத்துக்கு இணாக்கவோடும், பிரமுகரும் ஆதன் பலியிடப்பட்டன. ஆரவே ஆதமுகராவலர் வண்ணச் சிவன் கோவிலை 1876.ம் ஆண்டு மார்கழி மாதத்தில் ஒரு பெரிய சபையைக் கூட்டினார். அங்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலை ஒழுங்காய் நடத்துதலற்காக ஒரு நிர்வாகசபை நியமிக்கப்பட்டது.

• • •

தற்போதிருக்கும் கந்தசுவாமி கோவில் கட்டுமெழுது ஒரு முஸ்லிம் பெரியார் சமாதி வளவிலில் அகப்பட்டுவிட்டது. இவை அப்பகுதியில் முன்னாரு ஒருபேறி பிருந்த முஸ்லிம் மக்கள் தாம் தொழுவதற்கு வசதியின்மையால் வேறு ஒரு இடம் செய்தனர். பின்பு அக்கோவிலில் மேற்கு விதியில் ஒருவாசல் வைத்துச் சமாதியை அணுகி வணங்கிவர அவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டது. அங்கு இன்றும் உள்ள அந்த வாசற் கதவு அதற்கு அற்குறியாக உளது. சிறிது காலத்திற்கு முன்வரையும் அதன் அருகே உள்ள வெளிப்புறத்தில் பக்தன் இட்டு அங்குள்ள முஸ்லிம் மக்களால் தொழுகை நடத்தப்பட்டு வந்தது.

